DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Preliminary Register — Case No:CC 189 of 2017

Sessions

Deposition of Witness for PW 1

| | |
|---|---|
| Name | : திரு.தேவராஜ் |
| Age | : 61 |
| Father's/Husband's Name | : சின்னசாமி |
| Village | : குப்புச்சிபாளையம் |
| Taluk | : பல்லடம் |
| Occupation | : ரைஸ்மில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of August 2021

முதல் விசாரணை: நாள்: 04.09.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ரைஸ் மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 12.05.2012 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்து வந்தபோது குப்புச்சிபாளையம் பஸ் ஸ்டாப் அருகே விபத்து ஏற்பட்டு எனக்கு தெரிந்த வெங்கடாசலம் என்பவர் கீழே விழுந்து கிடந்தார். வெங்கடாசலம் மொபட்டில் சென்றுள்ளார். அவர் மீது மோதிய வாகனம் எது என்று எனக்கு தெரியவில்லை. வெங்கடாசலத்திற்கு தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை ஆம்புலன்சு வரவழைத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். பின்பு அவினாசிபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1., விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டிவந்தார், அதன் பதிவு எண் என்ன என்பது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எழுதி வைத்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தைதான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது சுமார் 15 பேர் இருந்தார்கள். கூட்டமாக இருந்ததை பார்த்துதான் நான் அங்கு சென்றேன்.

மறுவிசாரணை:

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்